பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

17 09 2025 WEDNESDAY 12.40 PM

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. ஆரோக்கியமான பெண்கள் – வலுவான குடும்பம் என்ற தேசிய அளவிலான இயக்கத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று தொடங்கி வைத்தார்.

2. கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு 342 கோடி ரூபாய் மானியத்தை 15வது நிதிக்குழு இன்று விடுவித்துள்ளது.

4. ஜம்மு கஷ்மீரின் வைஷ்ணவ் தேவி கோவில் புனித யாத்திரை, இன்று மீண்டும் தொடங்கியது

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – ஷிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

ஆரோக்கியமான பெண்கள் – வலுவான குடும்பம் என்ற தேசிய அளவிலான இயக்கத்தையும், 8வது தேசிய ஊட்டச்சத்து திட்டத்தையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்தியப்பிரதேச மாநிலம் Dhar-ல் இன்று தொடங்கி வைத்தார்.

அப்போது பேசிய அவர், பெண்களின் ஆரோக்கியத்தை காப்பதற்காக கொண்டுவரப்பட்டுள்ள இந்த அரிய திட்டத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த இயக்கத்தின் கீழ் நடத்தப்படும் முகாம்களுக்குச் சென்று பெண்கள், தங்களது உடல்நலம் குறித்து மருத்துவ ரீதியான ஆலோசனைகளைப் பெற்று, பயன்பெற வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

பெண்கள் ஆரோக்கியமாக இருந்தால் தான், அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்ய முடியும் என்றும் அவர்களது குடும்பமும் நலமுடன் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் 15 லட்சம் பெண்கள் பயன்பெறும் வகையில், Matru Vandana திட்டத்தின் கீழ், திரு. நரேந்திர மோடி நிதியுதவியை வழங்கினார்.

ஏழை எளிய பெண்களுக்கு தேவையான ஊட்டச்சத்து மற்றும் மருத்துவ உதவியை பெறவும், மகப்பேறு காலத்தில் அவர்களுக்கான நிதியதவியையும் இந்த திட்டம் உறுதி செய்கிறது.

நாட்டின் முதலாவது பிஎம் மித்ரா பூங்காவை Bhainsola-வில் அவர் தொடங்கி வைத்தார்.

விவசாயிகளுக்கும், இளைஞர்களுக்கும் பொன்னான வாய்ப்புகளை இந்த பூங்கா வழங்கும் என்று கூறிய பிரதமர், பண்டிகை காலத்தில் பொதுமக்கள், உள்நாட்டு உற்பத்திப் பொருட்களையே வாங்கி பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அதிக அளவில் மக்களிடம் கொண்டு செல்ல வர்த்தகர்கள் உதவிட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

பழங்குடியினர் மற்றும் கிராமப்புற மக்களுக்கான மருத்துவ சேவை திட்டத்தையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்நிகழ்ச்சியின்போது தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 75வது பிறந்தநாளையொட்டி நாடு முழுவதும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நாளை முன்னிட்டு குடியரசுத்தலைவர் உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், கடின உழைப்பு மூலம் தலைசிறந்த தலைவராக உயர்ந்தவர் பிரதமர் திரு. நரேந்திர மோடி என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பிரதமரின் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய தலைமை காரணமாக இந்தியா உலக அரங்கில் முன்னிலை பெற்று வருவதாக கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, திரு. அஷ்வினி வைஷ்ணவ், தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி,

பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் பிரதமருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்நாளையொட்டி, சென்னை மீனம்பாக்கத்தில் நடைபெற்ற ரத்த தான முகாமை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உலக பொருளாதாரத்தில் இந்தியா நான்காவது இடத்தை அடைந்துள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பிறந்தநாளையொட்டி, தூய்மை இந்தியா இயக்கத்தின் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

அனைத்து அரசு அலுவலகங்களிலும் இதற்கான உறுதிமொழியை ஊழியர்கள் எடுத்துக் கொண்டனர்.

சென்னை வானொலி நிலையத்தில் தூய்மை இந்தியா இயக்க உறுதிமொழி ஏற்கப்பட்டது.

>>>>>><<<<<<

தமிழ்நாடு மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு 342 கோடி ரூபாய் மானியத்தை 15வது நிதிக்குழு இன்று விடுவித்துள்ளது.

இதுதொடர்பாக, பஞ்சாயத்ராஜ் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழகத்திற்கு நடப்பு நிதியாண்டில் முதல் தவணையாக 127 கோடி ரூபாயும், அஸ்ஸாம் மாநிலத்திற்கு 214 கோடி ரூபாயும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் அன்றாட துப்புரவு பணிகளுக்கும், தூய்மையான கழிவறைகளை பராமரிப்பதற்கும் வீடுகளிலிருந்து பெறப்படும் குப்பைகளை அகற்றி, மறுசுழற்சிக்கு பயன்படுத்தவும் இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பான குடிநீர் விநியோகம், மழைநீர் சேமிப்பு, நீர் மறுசுழற்சி போன்ற திட்டங்களுக்கு இந்த தொகையை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தேசிய விருது பெற்ற திரைப்படமான Chalo Jeete Hain

இன்று நாடு முழுவதும் மறு வெளியீடு செய்யப்படுகிறது.

சுவாமி விவேகானந்தரின் தத்துவமான “ மற்றவர்களுக்காக வாழ்பவர்கள் மட்டுமே உண்மையிலேயே வெற்றி பெறுவார்கள் என்ற தத்துவத்திற்கு திரைவடிவில் புகழாரம் சூட்டும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த திரைப்படம் இன்று முதல் அக்டோபர் ஆம் தேதி  2025 வரை இந்தியா முழுவதும் சிறப்பு மறு வெளியீடு செய்யப்படுகிறது.

2018 ஆம் ஆண்டில் அதிகம் பார்க்கப்பட்ட குறும்படங்களில் ஒன்றாக, விமர்சன ரீதியாக பாராட்டப்பட்ட இந்தப் படம் தமிழ் உட்பட பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, லட்சக்கணக்கான பள்ளிகளிலும், நாடு முழுவதும் சுமார் 500 திரையரங்குகளிலும் திரையிடப்படுகிறது..

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வாழ்க்கையில் சிறு வயதில் நடந்த ஓர் சம்பவத்தை மையமாகக் கொண்டு இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது.

சுவாமி விவேகானந்தரின் தத்துவத்தால் ஆழமாக ஈர்க்கப்பட்டு, அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவும், தனது சிறிய உலகில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவும் பாடுபடும் நரு என்ற இளைஞனின் கதையை இந்த படம் எடுத்துச் சொல்கிறது.

>>>>>><<<<<<

ஆன்லைன் பணப்பரிவர்த்தனையில் நுகர்வோர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், மூன்றாம் தரப்பு சேவை நிறுவனங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

பணப்பரிவர்த்தனையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு குறிப்பிட்ட கால அடிப்படையில், நுகர்வோருக்கு பணத்தை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு, ஆன்லைன் பணப்பரிவத்தனை சேவை நிறுவனங்களுக்கு உள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

நுகர்வோர் குறைகளை பெறுவதற்கும், அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதற்கும் வெளிப்படையான கட்டமைப்பை இந்நிறுவனங்கள் உருவாக்கித் தர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் மின்னணு பாதுகாப்பு கட்டமைப்பில் சேவை நிறுவனங்கள் மேற்கொள்ளும் ஆன்லைன் பணப்பரிவர்த்தனைகள் குறித்த விவரங்கள் பதிவிடுவதை ரிசர்வ் வங்கி  கட்டாயமாக்கியுள்ளது.

ஆன்லைன் பணப்பரிவத்தனை நிறுவனங்கள். வர்த்தக நிறுவனங்களுக்கு இடையேயான பரிவர்த்தனைகளை மேற்கொள்வதும் தடை செய்யப்பட்டுள்ளது

>>>>>><<<<<<

விஷ்வகர்மா ஜெயந்தியை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், புதிய படைப்புகளை உருவாக்கும் கைவினை கலைஞர்கள் சிறப்பான படைப்புகளை தர இந்நாளில் வாழ்த்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திறமைமிக்க, கடின உழைப்புடன் கூடிய கைவினைஞர்கள் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் பலம் வாய்ந்தவர்கள் என்றும் பிரதமர் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரின் ரியாஸி மாவட்டத்தில் உள்ள வைஷ்ணவ் தேவி கோவில் புனித யாத்திரை இன்று மீண்டும் தொடங்கியது.

மோசமான வானிலை, நிலச்சரிவு காரணமாக கடந்த 22 நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த யாத்திரை, இன்று மீண்டும் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Trikuta மலையில் உள்ள இந்தக் கோவிலுக்கு ஏராளமான யாத்திரிகர்கள் Katra முகாமிலிருந்து இன்று காலை புறப்பட்டனர்.

யாத்திரிகர்களின் பாதுகாப்பிற்கான அனைத்து ஏற்பாடுகளும் அரசு தரப்பில் செய்து தரப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26ஆம் தேதி புனித யாத்திரை செல்லும் பாதையில் நிலச்சரிவு ஏற்பட்டதால், பல யாத்ரிகர்கள் உயிரிழந்ததை அடுத்து யாத்திரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

>>>>>><<<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – ஷிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 24-22, 21-13 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Junaidi Arif – Roy King Yap இணையை வென்றது.

>>>>>><<<<<<

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதிஷ் கருணாகரன் – ஆத்யா வாரியத் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-19, 21-14 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் Jin Seong – Ye Na Lee-இணையை வென்றது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் Tasnim Mir-ம் முந்தையசுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

கொரியாவில் நடைபெற்று வரும் ஆசிய சாப்ட் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Jay Meena வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில்  முதலில் பேட் செய்து வரும் இந்தியா, இந்தியா சற்றுமுன்வரை 21 புள்ளி நான்கு ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 130 ரன் எடுத்துள்ளது.

சண்டிகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில்  டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

>>>>>><<<<<<

குருகிராம் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Shruti Ahlawat காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>END<<<<<<